## கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை- திரு.கி.பாலசுப்பரமணியம், இ.ஆ.ப.,

ந.க எண்.ப.அ3 / 8713 / 2016 நாள் : 02 .05.2022

பொருள்: பணியமைப்பு – கடலூர் மாவட்டம் – ஊரக வளர்ச்சி அலகு – பணியிடைக்காலமான திரு.அ.கண்ணன் என்பவரின் வாரிசுதாரர் திரு-அ.க.பிரபாகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021-ன்படி இளநிலை உதவியாளர் பணி நிலையில் - வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை :

1. கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.ப.அ3/8713/2016,நாள்.12.06.2018
2. அரசாணை(நிலை) எண்48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021.
3. அரசு இணைச்செயலாளர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்(இ3) துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடிதம் எண். 6895/இ3/2021–5, நாள் 14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 18355/2021/டி2, நாள் 18.12.2021.

ஒன்றிய அலுவலகம், விருத்தாசலம் 24 MAY 2022

001079 636/2020

XXXXX

**உத்தரவு:**

கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு வெள்ளூர் ஊராட்சியில் ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 16.07.2016 அன்று பணியிடைக்காலமான திரு.அ.கண்ணன் என்பவரது வாரிசுதாரர் திரு-அ.க.பிரபாகரன் என்பவர் பார்வை(1)-ல் காணும் நடவடிக்கையின்படி கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பார்வை (2)-ல் காணும் அரசாணை(நிலை) எண் 48. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.அ.க.பிரபாகரன் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் பணி நிலையில் 18.06.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் / பதவி / தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | அரசாணை(நிலை) எண் 48. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021- ன்படி பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.அ.க.பிரபாகரன்,<br>ஊர்நல அலுவலர்(நிலை–2),<br>ஊராட்சி ஒன்றியம்,<br>விருத்தாசலம். | 18.06.2018<br>முற்பகல் | 18.06.2018<br>முற்பகல் |

மேற்கண்ட விபரங்கள் தனியரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கடலூர்.

பெறுதல்:

திரு.அ.க.பிரபாகரன்,
ஊர்நல அலுவலர்(நிலை–2),
ஊராட்சி ஒன்றியம்,
விருத்தாசலம்.
(உரிய வழிமுறையாக)

நகல்: அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9
நகல்: அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை-9
நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15

நகல்: பஅ3 பிரிவுக்கு.

Received,
A.K.P.

(True copy)

3/11/2022

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
விருத்தாசலம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
விருத்தாசலம்.

03/11/2022